# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2007 / 20087
## HELD IN MARCH / APRIL – 2008

## ECS 1.11 – INTRODUCTION TO MICRO ECONOMICS

எவையேனும் **ஐந்து** (05) வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) அருமை என்ற எண்ணக் கருவை விளக்கி பொருளியல் ஆய்வில் அதன் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.
(08 புள்ளிகள்)

(ஆ) ‘விலைப் பொறிமுறை’ முதலாளித்துவப் பொருளாதாரத்தை எவ்வாறு இயக்குகின்றது என விளக்குக.
(08 புள்ளிகள்)

(இ) ‘நுகர்வோன் இறைமை’ என்பதனால் கருதப்படுவது யாது?
(04 புள்ளிகள்)

02. (அ) ஒரு பொருளின் கேள்வியைத் தீர்மானிப்பதில் பின்வருவனவற்றின் பங்கினை விளக்குக.
i. குறிப்பிட்ட பொருளின் விலை
ii. குறித்த பொருளுக்கான பிரதியீட்டின் விலை
iii. குறித்த பொருளுக்கான நிரப்பியின் விலை
(06 புள்ளிகள்)

(ஆ) மேலுள்ள உமது விடையை பின்வருவனவற்றுடன் தொடர்புபடுத்திப் பரிசீலனை செய்க.
i. எரிபொருள் விலை அதிகரித்த அதேவேளை மோட்டார் வாகனங்களின் இறக்குமதியும் அதிகரித்துள்ளமை
(07 புள்ளிகள்)
ii. சுனாமிப் பாதிப்பிற்குட்பட்ட பகுதிகளில் மேசன் தொழிலாளர்களின் கூலி அதிகரித்துள்ளமை.
(07 புள்ளிகள்)

03. (அ) குறைந்து செல் எல்லைப் பயன் விதியைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) சமபயன் கோடுகளின் பண்புகளை விளக்குக.

(இ) சமபயன் கோட்டு ஆய்வில் நுகர்வோன் சமநிலை என்பதனால் கருதப்படுவது யாது.

(ஈ) வருமான அதிகரிப்பு நுகர்வோன் சமநிலையில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும் எனக்காட்டுக.
(தலா 05 புள்ளிகள்)

04. (அ) குறுங்காலம் நீண்டகாலம் என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
(05 புள்ளிகள்)

(ஆ) குறுங்கால மொத்த உற்பத்திக் கோட்டைப்பயன்படுத்தி சராசரி உற்பத்தி, எல்லை உற்பத்தி என்பவற்றை எவ்வாறு கணிப்பிடலாம் எனக் காட்டுக.
(15 புள்ளிகள்)

05. (அ) குறுங்காலத்தில் எல்லைச் செலவு, சராசரிச் செலவு என்பவற்றிற்கிடையிலான தொடர்புகளை ஒப்பிட்டு வேறுபடுத்துக.
(10 புள்ளிகள்)

(ஆ) நீண்டகால சராசரிச் செலவுக் கோட்டில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குக.
(10 புள்ளிகள்)

06. (அ) நிறைபோட்டி நிறுவனத்தின் பண்புகள் யாவை?
(05 புள்ளிகள்)

(ஆ) நிறைபோட்டியில் ‘நிறுவனம்’ , ‘தொழில்’ என்பதனால் கருதப்படுவது யாது?
(05 புள்ளிகள்)

(இ) ‘நிறைபோட்டி நிறுவனமொன்றின் ‘அசாதாரண இலாபம்’ ‘சாதாரண இலாபம்’ என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
(10 புள்ளிகள்)

07. தனியுரிமைச் சந்தையைக் கவனத்தில் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) கேள்விக்கோடு
(ஆ) சராசரி வருமானக் கோடு
(இ) வெளியீட்டுச் சமநிலை
(ஈ) விலை பேதப்படுத்துதல்

(தலா 05 புள்ளிகள்)

08. சிறு குறிப்பெழுதுக.

(ஆ) நிலைமாறல் பொருளாதாரங்கள்
(ஆ) கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சி
(இ) நெகிழ்ச்சியும் வரிச்சுமையும்
(ஈ) தனியுரிமைப் போட்டிச் சந்தை.

(தலா 05 புள்ளிகள்)

*****